# நரகம் என்றால் என்ன?

**“அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.” சங்கீதம் 146:4**

**நீ போகிற பாதாளத்திலே (Sheol) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே”. - பிரசங்கி 9: 5,10**

நரகம் உண்டு எனவும் சிலர் இல்லை எனவும் கூறுகின்றனர். வேதம் நமக்கு பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நரகத்தைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

அநேகர் நரகம் என்ற வார்த்தையை தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் சிலர் நரகம் என்றால் நித்திய வேதனை என்ற கருத்தை கொண்டிருக்கிறார்கள். இது இருண்ட காலத்தில் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கப்பட்ட தேவனற்ற ஜனத்தின் கருத்தாகும். வேதத்தில் சொல்லப்படும் நரகத்தை பற்றிய உண்மையை நம்பாமல், இருண்ட காலத்தில் சொல்லப்பட்ட கருத்தை இவர்கள் நம்புகிறார்கள்.

உலகம் முழுவதும் இன்று எல்லா மதங்களுமே நரகம் என்ற முடிவற்ற கொடிய வாதிக்கப்படுதலை, சித்ரவதையை போதித்துக் கொண்டிருக்கின்றன. ஆகையால் நாம், வேதத்தில் நமக்குச் சொல்லப்பட்ட நரகத்தைக் குறித்து நன்கு படித்து, கவனமாக ஆராய வேண்டியது மிக முக்கியமாகும்.

பழைய ஏற்பாட்டில் நரகம் (Hell) என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் ஒரே எபிரேய வார்த்தை ஷியோல் (**Sheol**) என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இதற்கு தொடர்பான கிரேக்க வார்த்தை ‘ஹெடேஸ்’ (**Hades**) என்பதாகும்.

வேதாகமத்தில் ‘ஷியோல்’ மற்றும் ‘ஹெடேஸ்’ 41 தடவைகள் நரகம் என்றும், 32 தடவைகள் கல்லறை என்றும் , 3 தடவைகள் குழி என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அடிக்கடி பாதாளம் நரகம் என்றும். நரகம் பாதாளம் என்றும் பொருள் படுத்தப்பட்டிருக்கிறது.(சங் 49:15; 55:15; 86:13; ஏசாயா 14:9; யோனா 2:2, 1கொரி 15:55; வெளி 20:13 )

**Revised version (RV), Revised Standard Version (RSV), Hebraic Roots Bible** போன்ற ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் இந்த நரகம் (**Hell**) என்ற விவகாரத்தை தள்ளி வைத்துவிட்டு, ஷியோல் **(Sheol)** மற்றும் ஹெடேஸ் **(Hades)** வார்த்தைகளை மொழிபெயர்க்காமல் அப்படியே உபயோகித்து இருக்கிறார்கள். அதனால் 76 இடங்களிலும் ஒரே பொருளில் இதனை கருத்தில் கொள்ள உதவுகிறது.

இயேசு “தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி” (ஏசாயா 53:10, 12 ) பாதாளத்திற்கு இறங்கினார். ஆனால் அவர் ஆத்துமா பாதாளத்தில் (நரகம் - **Hell - Sheol** )விட்டு வைக்கப்படவில்லை. (சங் 16:10, அப் 2:27,31 )

பழைய ஆங்கில மொழியில் 'ஹெல்' (**Hell**) என்ற வார்த்தையின் சரியான அர்த்தம் 'மறைத்துக்கொள்' அல்லது 'மூடிக்கொள்' என்பதாகும். '**helling the potatoes'** என்றால் உருளைக்கிழங்குகளை குழியில் புதைத்தல் என்று பொருள். 'helling a house' என்றால் மூடுவது அல்லது கூரை போடுவது என்பதாகும். இருண்ட காலத்தில் இறையியல் மேதைகள் நரகம் என்பதற்கு 'வேதனை மிகுந்த இடம்' என்ற தவறான அர்த்தத்தை புகுத்தும் முன் அந்தச் சொல், 'ரகசிய, மறைந்து இருக்கும் மரண நிலை' என்ற சரியான கருத்தையே குறித்தது. அதன்படி பார்த்தால் நரகம் ( **Sheol or Hades**) என்றால், தன் நினைவற்ற உணர்வற்ற மரண நிலையைத்தான் குறிக்கிறது.

நரகம் என்றால் நெருப்பு, வேதனை, கூக்குரல் நிறைந்த ஓர் இடம் என்ற கருத்திற்கு மாறாக, **"மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்**"... " நீ போகிற பாதாளத்திலே **(Sheol) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே**". - **பிரசங்கி 9: 5,10**

"மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை, பாதாளத்தில் (**Sheol**) உம்மை துதிப்பவன் யார்?" "பாதாளம் (Sheol) உம்மைத் துதியாது. மரணம் உம்மை போற்றாது". "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்." ( சங் 6:5, 71:20, 146:4; ஏசாயா 38:18 ) என்று வேதம் கூறுகிறது.

நல்லோரும், தீயோரும் இறந்தபின் பாதாளத்திற்கு ( **Sheol** ) போவார்கள். உதாரணமாக யாக்கோபு 'துக்கத்தோடு என் குமாரனிடத்தில் பாதாளத்தில் ( **Sheol** ) இறங்குவேன் என்றான். (ஆதி 37:35 ). "மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?". அப்போது தூளில் ஏகமாய் **இளைப்பாறுவோம்** என்றான்." (யோபு **14:10; 17:16**). அதாவது மரணம் என்பது நாம் தூக்கத்தில் இளைப்பாறுவதுபோல ஒரு நிலை, உணர்வற்ற அழிந்து போன நிலை.

தேவன் ஆதாமிடம் பாவத்திற்கான தண்டனையை பற்றி கூறும்போது, "அதைப் புசிக்கும் நாளிலே நித்தியமாய் வேதனையை அனுபவிப்பாய்" என்று கூறவில்லை. ஆனால் "சாகவே சாவாய்" (ஆதி 2:17 ) அதாவது உயிரோடு இருக்கமாட்டாய் என்ற உண்மையைத்தான் சொன்னார்.

ஆதாம் புசிக்க வேண்டாம் என்று தேவனால் சொல்லப்பட்ட அந்த கனியை புசித்த அதே நாளில் ( 1000 வருடம் கொண்ட நாள் - 2 பேது 3:8 சங் 90:4 ) 930 வருடங்கள் வாழ்ந்து மரித்துப் போனான்.

தேவன் சொன்னதற்கு மாறாக பிசாசானவன் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று பொய் சொன்னான். ஏனென்றால் அவன் இதன் மூலம் கிறிஸ்துவின் உயிர்தெலுதலின் முக்கியத்தை உலகம் காணமுடியாதவாறு செய்கிறான். அவன் பொய்யனும், பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். (யோவான் 8:44 ) அன்றிலிருந்து, மரித்தவர்கள் உண்மையில் மரிக்கவில்லை, மரித்தாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நியாயத் தீர்ப்பின் நாளுக்கு காத்திருக்காமல், பரலோகத்திற்கோ அல்லது நித்திய வேதனைக்கோ சென்று விடுகிறார்கள் என்று அநேகரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறான். ஆனால் வேதாகமம் தெளிவாக எடுத்துச் சொல்கிறது, "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்", (பிரசங்கி 9:5)

✡✡✡✡✡✡✡

**For More truth contact : 900 33 28 555**